**<u>CC.238/2017</u>**

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.131/2025 Dt– 03.03.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.4 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

<u>13.08.2025</u>

<u>அ.சா.4– சுரேஷ்காந்த், த.பெ.பால்ராஜ்</u>

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னை இவ்வழக்கில் போலிசார் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்ததேதி எனக்கு நினைவில் இல்லை. ஆனால் சம்பவத்திற்கு பின்னர் தான் விசாரித்தார்கள். வழக்கு சம்பவம் நடந்து சுமார் ஒரு வாரம் கழித்து விசாரித்தார்கள். நான் நீதிமன்ற முதல்விசாரணையில் சொன்ன சங்கதியைத்தான் போலிசாரிடமும் கூறினேன். வழக்கில் இறந்த நபர் எனது தம்பி ஆவார். கூடுதல் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக மாணவர்கள் கூட்டமைப்பு நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டதால் எனது தம்பியை வின்செண்ட் ராஜா அடித்தது தொடர்பாக நான் காவல்நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை.

வழக்கு சம்பவம் குறித்து எனக்கு 03.01.2014ம் தேதி தகவல் தெரிந்தது. நான் திருவரங்கத்தில் உள்ள திருஇருதய மேல்நிலைப்பள்ளியில் தான் படித்தேன். எனது தம்பி 10ம் வகுப்பு அரையாண்டு தேர்வில் பார்த்து எழுதி மாட்டிக்கொண்டதால் பெற்றோர்களை அழைத்து வரச்சொன்னதால் எனது தம்பி தூக்குமாட்டி தற்கொலை செய்துகொண்டார் என்றாலும், நான் எனது அம்மா கொடுத்த பொய் புகாருக்கு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.